பகுதி 3

என் முகம் தானாக சிறுக்கிறது
நெஞ்சம் சுளீர் என்று வலிக்கிறது
கண்கள் கோபம் காட்டுகிறது
நீ மற்ற பெண்ணோடு சிரிக்கும் போது
அது ஏனோ?

ஒரு நாள் மாலை, பிரஜீதா, தன் தோழியின் வீட்டிற்கு சென்று விட்டு, புத்தகம் வாங்க புத்தகக் கடைக்கு சென்று விட்டு, பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் நேரமோ என்னவோ? அவள் செல்ல வேண்டிய பேருந்து மட்டும் வரவில்லை, நேரம் வேறு பந்தயக் குதிரை போன்று, ஆறை தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. அவள் வீட்டில் இருந்து, அவள் அலைபேசிக்கு இரண்டு தடவை அழைப்பு வந்து விட்டது. அவர்களை சமாளித்து, பேருந்துக்காக நிற்கும் வேளையில், அவள் அருகில் சஞ்சீவ் பைக்கோடு வந்து நின்றான்.

அவளிடம் அவன் “என்ன இந்தப் பக்கம், பிரஜீதா ?” எனக் கேட்க, அவளோ தான் வந்த விவரத்தைக் கூற, அவன் யோசித்தான்.

அவளோ, தன்னை பைக்கில் ஏறச் சொல்லப் போகிறானோ, என எண்ணினாள். ஆனால் அவனோ “சரிங்க பஸ் வர லேட் ஆகும் போல, நீங்க ஆட்டோல போங்களேன் “ என்று சொல்லவும்,

‘பரவாயில்லையே வழியாமல் இருக்கிறானே’ என மனதில் மெச்சிக் கொண்டு, “இல்ல இந்நேரம், ஆட்டோல… தனியா… பயமா… இருக்கு” என்று தன் பயத்தைத் தயக்கத்தோடுத் தெரிவிக்க,

அவனோ யோசித்து, “நான் ஆட்டோ கூப்பிடுறேன், நீங்க பயப்படாம அதுல போங்க, நான் பின்னாடியே ஃபாலோ பண்ணிட்டு வரேன்” என்று தைரியம் சொன்னான்.

அவளுக்கும் அது சரி என பட, “சரிங்க” எனத் தலையாட்டினாள்.

அவனும் ஒரு ஆட்டோவை அழைத்து, அவளிடம் முகவரி கேட்டு, ஆட்டோக்காரனிடம் சொல்லி பேரம் பேசி, அவளை ஏற்றி விட்டான். அவள் ஏறப் போகும் போது, “பிரஜீ உங்க நம்பர் தாங்க” என்றான்.

அவள் திடுக்கிட்டு “எது…துக்கு…” எனத் திணற,

அவன் அவள் அருகில், மிக அருகில், அவளுக்கு மட்டும் கேட்குமாறு “நான் மெயின் ரோட் வரை தான் வர முடியும், அதுக்கப்புறம் உங்க ஏரியா தான, ரெண்டு சந்துல நீங்களா போயிடுவீங்கள? இருந்தாலும் ஒரு சேஃப்ட்டிக்கு, நீங்க பத்திரமா போய்டீங்களான்னு கேட்டு தெரிஞ்சுக்க தான் கேட்டேன்” அவள் யோசிக்கவும், “சரி உங்களுக்கு இஷ்டம் இல்லேன்னா வேணாம்” என நகரப் பார்த்தான்.

அவளும் மேற்கொண்டு அவனிடம் வாதாடாமல், ஆட்டோக்காரன் வேறு இருப்பதால், சட்டென்று “அப்படிலாம் இல்லை” என்று தன் எண்ணை அவனிடம் தெரிவிக்கப் போக, அவனோ தன் அலைபேசியை நீட்டி, அவள் எண்ணை அழைக்கச் சொன்னான். அவளும் அவ்வாறே செய்து விட்டுக் கிளம்பினாள். அவனும் சொன்னது போல பின் தொடர்ந்தான்.

பின் வீட்டிற்கு வந்து சேர்ந்த தன்னிடம், போன் செய்து விசாரித்த சஞ்சீவை சந்தேகப்பட்டாள் பிரஜீ. ‘நமக்கு இவ்ளோ தூரம் மெனக்கெட்டு உதவி செய்றானே, இதே மாதிரி மற்றவங்களுக்கும் செய்வானா? என் கிளாஸ் மேட்ஸுக்கு….? இல்ல என்கிட்ட மட்டும் …….?’

இது என்ன மாயம் - சாரா

‘ஒரு வேளை உன்னை ஃபாலோ பண்ணி வந்தானோ?’ என்று மனசாட்சி வேறு பிட் சேர்க்க, ‘அதுதானே?’ என்று சிந்திக்க தொடங்கினாள். ஆனால் என்ன சிந்தித்தாலும், நடந்தது என்னவென்றால்????????

இப்போது பிரஜீக்கும் சஞ்சீவின் எண் தெரிந்து விட்டது, சஞ்ஜீவுக்கும் பிரஜீயின் எண் தெரிந்து விட்டது. ஆகையால் காலை வணக்கத்தில் ஆரம்பித்து, பின் காலை, மாலை, இரவு என்று மூன்று வேளை வணக்கங்கள் பரிமாறப்பட்டு,

“பிரஜீ இன்னிக்கு நீ கோவிலுக்கு வரலையா?” என்று அலைப்பேசியில் கேட்க,

“இம் ஆமா சஞ்சீவ்” கல்லூரியில் “சார்” என்றழைத்து, பின் அவர்கள் நட்பு வளரவும், அவளை தன் பெயரை சொல்லி அழைக்க சொன்னான். அவளும் அவன் இப்போது கல்லூரிக்கு வருவதில்லை என்பதால், தாராளமாக அழைத்தாள்.

“ஏன் வரவில்லை? நான் உனக்காக எவ்ளோ நேரம் வெயிட் செய்தேன் தெரியுமா?” என்று உரிமையாய் கேட்க,

“ஓ… அப்படியா?”

“என்ன அப்படியா? சரி… ஏன் வரவில்லை சொல்லு “ என கேட்க

அவளோ தன் உடல்நிலை காரணமாக செல்லாததால், அதை எப்படி அவனிடம் சொல்ல முடியும் எனச் சங்கடப்பட்டுக்கொண்டே, வேறு காரணம் சொல்ல யோசித்து, பின் “இம்ம்… அது வந்து வீட்ல கெஸ்ட் வந்துட்டாங்க பா, அதான் வர முடியல”

இது என் மாயம் - சாரா

நேரம் கடந்து பதில் வரவும், அவள் பொய் சொல்கிறாளோ என யூகித்து, மேலும் அவன் “சரி, அவங்க போனதுக்கப்புறம் வந்திருக்கலாமில்ல?” என விடாமல் தொடர்ந்தான்.

“இம்ச்சு… நேரமாயிடுச்சு சஞ்சீவ்”

“ஏன் உங்க வீட்ல இருந்து, பத்து நிமிஷம் தானே கோவிலுக்கு, நீ வந்திருக்கலாம்” என அவன் காத்திருந்த ஆதங்கத்தில் கூற, மேலும் “இல்ல நீ பொய் சொல்ற, என்கிட்ட எதையோ மறைக்கிற” என நேரடியாகக் கேட்டான்.

‘அட ராமா, இவனுக்கு இது ரொம்ப முக்கியமான விஷயம், நான் அதை மறைக்கிறேனா?’ என மனதுள் நொந்துக் கொண்டே, திடீரென “அப்படி எல்லாம் இல்ல சஞ்சீவ், சரி நீங்க ஏன் அங்க இருந்து, இங்க இந்த பெருமாள் கோவிலுக்கு வர்றீங்க?” எனப் புத்திசாலித்தனமாகக் கேட்டாள். ஏனென்றால், இத்தனை நாள் பழக்கத்தில், சஞ்சீவ் எங்கிருக்கிறான், அதாவது அவன் வீடு இருக்கும் ஏரியாவை தெரிந்து வைத்திருந்தாள். அந்த ஏரியா, இவர்கள் ஏரியாவில் இருந்து இரண்டாவதாக அமைந்திருந்தது மற்றும் பேருந்தில் வந்தால் கூட மூன்று நான்கு நிறுத்தங்கள் வரும்.

“அது…” என தடுமாறுவது, இப்போது சஞ்சீவின் முறையாயிற்று.

“ஏன் எங்க பெருமாள் ரொம்ப ஸ்பெஷலோ?” என அவன் தடுமாறுகிறானே என்று யோசியாமல், அவர்கள் பெருமாளின் சிறப்பைப் பெருமையாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவனும், அவளே அவனுக்கு பதில் எடுத்துக் கொடுத்த சந்தோஷத்தில், “இம், ஆமா உங்க பெருமாள் ரொம்ப விஷேசமானவருன்னு என் பிரண்ட் சொன்னான்” என்று மழுப்பினான்.

இவ்வாறாக, அவர்கள் அலைப்பேசி எண்ணின் பரிமாறல், பரிணமித்து, பரிமாணம் அடைந்தது.

ஒரு நாள், கல்லூரியில் மென் பொருள் மற்றும் பெரிய நிறுவனங்கள், வேலைக்கு, எழுத்து தேர்வு எல்லாம் வைத்து முடித்து, நேர்காணல் நடத்திக் கொண்டிருந்தது. ஆனால் பிரஜீதாவோ, நகம் கடித்தப்படி, பைலும்(file) கையுமாக, அங்கிருந்த வராண்டாவில் நடந்துக் கொண்டே, அங்கிருக்கும் பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் சில நிமிடங்களில், பிரஜீக்கு நேர்காணல் நடக்கப் போகிறது. ஆம், அவள் எழுத்து தேர்வில் தொடங்கி எல்லாக் கட்டத்திலும் தேர்வாகி, இப்போது நேர்காணல் அளவுக்கு வந்திருந்தாள். ஆனால் இப்போது அவள் பதற்றமாக இருப்பதற்கு காரணம், அவளுடனே தேர்வெழுதி அவளை போலவே நேர்காணல் அளவுக்கு அவள் தோழி மலரும், தேர்வாகி இருந்தாள். ஆனால் அந்த மலர், இன்று கல்லூரிக்கு இன்னும் வர தான் காணோம். அதனால் தான் பாதையையே பார்த்து பதட்டபட்டுக் கொண்டு, நகத்தை கடித்துக் கொண்டிருந்தாள்.

நல்ல வேலை, அவளின் நகக் கண்ணில் இருந்து இரத்தம் வருவதற்குள், அவள் தோழி மலர் அரக்க பறக்க, இவளை நோக்கி ஓடி வந்தாள். “ஏய் ஏன் இவ்வளவு லேட்? நான் பயந்து போயிட்டேன்” என்றாள்.

“ஐயோ, அத ஏன் மா கேட்குற, நான் வந்த பஸ் பஞ்சர், வேற பஸ்ல வரலாம்னா கூட்டம், நல்ல வேள, சஞ்சீவ் சார் வந்து என்ன ட்ராப் பண்ணிட்டு போனார். தேங்க் காட், உப்ப்...” என்று பெரிதாக பேசி முடித்து, பெருமூச்சு விட்டாள்.

இது என்ன மாயம் - சாரா

பிரஜீக்கு அவள் சொல்லி முடிக்கவுமே முகம் சிறுத்து விட்டது. அதனால் அவள் எதுவும் பதில் அளிக்கவில்லை. ஆனால் அவள் தோழியோ இதைக் கவனிக்கும் நிலையில் இல்லை, அவளுக்கு தாமதமாக வந்த பதற்றம் இன்னும் மீதம் இருக்க, “சரி, சரி வா பிரஜீ, போகலாம், டைம் ஆச்சு” என அவளுடன் கைக் கோர்த்து சென்றாள்.

“இம்” என தலையாட்டிக் கொண்டு பிரஜீயும் செல்ல, சரியாக அப்போது சஞ்சீவ் அலைப்பேசியில் அழைக்க, “ஹலோ பிரஜீதா ஆல் தி பெஸ்ட், நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்குல?”

“இம்” என்றாள் சுருக்கமாக

“ஹே என்னாச்சு? பிரிஸ்க்லெஸ்ஸா தெரியுற”

“ஒன்னும் இல்ல, இப்ப தான் மலர் வந்தா, அதான் இன்டர்வியூ நடக்குற இடத்துக்கு போயிட்டு இருக்கேன்” என்றாள்.

“இம் ஆமா, நான் தான் மலர ட்ராப் பண்ணேன்” என்று சொல்ல, அவளோ அதை அலட்சியப்படுத்தி, இப்போது அவனிடம் வெளிக்காட்ட முடியாதக் கோபத்தில், “சரி வச்சிடுறேன்” என்று மறைமுகமாக கோபத்தைக் காட்டி, வைத்து விட்டாள்.

அன்று தனக்கு உதவிய போது, தன் தோழிகளுக்கும் இதே போல உதவுவானா? என்று சந்தேகித்த பிரஜீதா தான், இன்று அவன், அவள் நினைத்தது போலவே, அவள் தோழிக்கும் உதவினான். ஆனால் இன்றோ, பிரஜீதாவின் இந்த மாற்றம் அவளுக்கே தெரியவில்லை.

ஆனால் இதையெல்லாம் ஒதுக்கி விட்டு, நேர்காணலுக்குத் தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டு, சென்று வெற்றியும் பெற்றாள். அவள் தோழி மலரும் வெற்றிக் கண்டாள். வெற்றி பெற்றவர்களை சக

இது என் மாயம் - சாரா

மாணவமாணவியர்களும், பேராசிரியர்களும் பாராட்டினர். பின் இந்த மகிழ்வோடே வீட்டிற்குச் சென்றாள்.

பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் தெரிவித்தப் பின், தனிமையில், மாடியில் சஞ்சீவுக்கும் அலைப்பேசியின் மூலம் தெரிவித்தாள். அவன் அளித்த பயிற்சிக்கும், உற்சாகத்திற்கும் நன்றி தெரிவித்தாள்.

சஞ்சீவ் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு, “ஆனாலும் உன் முயற்சியினால் தான் நீ வெற்றி பெற்றாய் பிரஜீ” என்று கூறிவிட்டு, அவளிடம் ட்ரீட்டாவது கேட்டிருக்கலாம்.

ஆனால் அவனோ “ஆமா, மலருக்கு என்னாச்சு? இண்டர்வியூல செலக்ட் ஆகிட்டாளா?” என கேட்க, பிரஜீக்கு மீண்டும் முகம் சிறுத்து போக, “இம்… ஆகிட்டா” என்று பேச்சில் சுருதிக் குறைந்தது.

“நல்ல வேளை, காலைல லேட் ஆகிருச்சுன்னு டென்ஷன்ல இருந்தா, பாவம்” இப்போது அவன் தான் பாவமாக போகிறான் என்று தெரியாமல் சொல்ல,

“இம்… அதான், நீங்க, உங்க பைக்ல வந்து சரியான டைம்ல, ட்ராப் பண்ணிட்டீங்கள” எனப் புருவத்தை நெரித்து காட்டமாகச் சொன்னாள்.

அவனோ அதிர்ந்து “அப்படியா… சொன்னா?”

“இம்… அப்படி தான் சொன்னா, ஏன் நீங்க ட்ராப் பண்ணலையா? காலைல கூட நீங்க சொன்னீங்க, நான் தான் அவள காலேஜ்ல விட்டேன்னு” என்று உணர்ச்சி மிகுதியில் வேகவேகமாகக் கொட்டினாள்.

“ஹான்… ஆமா, நான் தான் ட்ராப் பண்ணேன், ஆனா கார்ல கொண்டு வந்து விட்டேன்”

“ஓ… நீங்க கார் வச்சிருக்கீங்களா?”

இது என் மாயம் - சாரா

“இல்ல இல்ல ஆபீஸ் கார், வொர்க் இருக்கிறதாலா கொடுத்தாங்க” என விவரம் சொன்னான்.

“ஓ… சரி சாப்பிட்டீங்களா?” என மெல்ல நிம்மதி அடைந்தாள். ஏனென்றால், கம்பெனி கார் என்றால், காரோட்டி இருந்திருப்பான், இவர் முன்புறமும், மலர் பின் புறமும் அமர்ந்திருப்பாள் என்று அவளே கணக்குப் போட்டுக் கொண்டாள்.

பின் சிறிது நேரத்தில் உரையாடலை முடித்துக் கொண்டாள். இரவில், காலையில் இருந்து நடந்தவற்றை எண்ணிப் பார்த்தாள். காலையில் சஞ்சீவ் மீது தான் கொண்ட கோபமும், மாலையில் அவன் பதிலால் தான் அடைந்த நிம்மதியையும் எண்ணி தன் நிலை குறித்து சிந்தித்து பார்த்தாள்.

சிந்திக்க சிந்திக்க, அவளுக்கு வெட்கம் கலந்தப் புன்னகை தான் வந்தது. ஆனால் ஏன் வந்தது? எதற்கு வந்தது? என்று அவள் சிந்திக்க தான் இல்லை. அதே போல சஞ்சீவ், தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் என்று அவள் ஆராயவும் இல்லை. ஆனால் இந்த அனுபவத்தை ரசிக்க ஆரம்பித்திருந்தாள்.

மொத்தத்தில், சஞ்சீவ் மீது, எல்லை மீறிய ஆளுமை உணர்வு (possessiveness) அவள் மனதுள் உருவாகி விட்டது என்பது திண்ணம். இதை அவள் உள்மனது அறிந்திருந்தது, ஆனால் அவள் வெளிமனதோ அதை அறியாமல் விட்டது.

பின் மூன்றாம் ஆண்டு பருவத் தேர்வு முடிந்து, விடுமுறையும் முடிந்து, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்தாள் பிரஜீதா.

அதற்குள் சஞ்சீவும், பிரஜீதாவும் அடிக்கடி குறுந்தகவல் அனுப்பவும், ஒருவர் சோர்ந்திருந்தால், மற்றவர் ஆறுதலாக இருப்பதும், சின்ன சின்ன

இது என்னை மாயம் - சாரா

சண்டைகள் போடுவதும், தினமும் அல்லாமல், வாரத்திற்கு ஒரு தடவை, அலைப்பேசியில் பேசுவதும் என்று நன்றாக போய் கொண்டிருந்தது, அவர்களின் நட்பு.

அது நட்பா? என்றால், அது அவர்களுக்கே தெரியாத கேள்வி, அவர்கள் அதற்கு விடைத் தேடவும் முயலவில்லை, அதைப் பற்றி கவலையும் படவில்லை. ஆனால் இருவருக்கும் அல்ல, பிரஜீக்கு சஞ்சீவ் இல்லையென்றால், அதாவது அவளுக்கு குறுந்தகவல் அனுப்பாமலோ, அல்லது பாசமாய் பேசாமலோ இருந்தால், அன்று பிரஜீ சென்னையில் இருந்தாலும், சஹாரா பாலைவனத்தில், தனிமையாய் இருந்தது போல உணர்வாள்.

அவனிடம் இதை அவள் பகிர்ந்ததற்கு, அவனும் இதையே சொன்னான். பிரஜீக்கு மகிழ்ச்சி தாளவில்லை, உலகமே புதிதாய், சந்தோஷமாக இருப்பது போல் தோன்றியது.

நான்காம் ஆண்டில், கல்லூரியில் முதல் நாள், பிரஜீதா வகுப்பை கவனித்துக் கொண்டிருந்தாள். பின் இடைவெளியில், தன் அலைப்பேசியை எடுத்து பார்த்தாள். சஞ்சீவ் “எங்கே இருக்கிறாய்?” என்று அரைமணிநேரத்திற்கு ஒரு தடவையாய், ஆறு குறுந்தகவல் அனுப்பி இருந்தான். அவனின் குறுந்தகவலைப் பார்க்கவும், அவளுக்கு காலையில் நடந்த சம்பாஷனை ஞாபகத்திற்கு வந்தது.

காலை ஆறு மணி அளவில், சஞ்சீவிடம் இருந்து அலைப்பேசியில் அழைப்பு வந்திருந்தது. நேற்று வரை விடுமுறை என்பதால், தாமதமாக எழுந்து பழக்கமாகவும், இன்று ஆறுக்கு அலாரம் வைத்து விட்டு தான் இரவு படுத்திருந்தாள். அதனால் அதன் ஒலியிலேயே எழுந்தவள், ஐந்து நிமிடம்

இது என்ன மாயம் - சாரா

கண்ணை மூடி, படுக்கையிலேயே அந்த காலைவேளை உறக்கத்தை ரசித்துக் கொண்டு படுத்திருந்தாள். அதை கலைப்பது போல அலைப்பேசி அழைக்க, கடுப்புடன் எடுத்து “ஹலோ ...” என்றதிலேயே அவள் துயில் கலையவில்லை என்று தெரிந்தது சஞ்சீவுக்கு.

“ஏய் பிரஜீ இன்னும் நீ எந்திரிக்கலையா? இன்னிக்கு காலேஜ் இருக்கு அதவாது தெரியுமா?”

“இம்ச்சு... தெரியும், இத சொல்லத் தான் கால் பண்ணீங்களா?”

“பின்ன நேத்து வரைக்கும் வோக்கேஷன், லீவ் ன்னு நல்லா ஊர் சுத்திட்டு, சின்னப் புள்ள மாதிரி நாளைக்கு ஸ்கூல்னா இன்னிக்கு தான் வீட்டுக்கு வருவாங்களே, அது மாதிரி நேத்து தான் சென்னைக்கே வந்திருக்க”

“இம்... எங்க பாட்டி ஊர் நல்லா இருக்கும், கொஞ்சம் கிராமம்மா, அத்தை  மாமா வேற வருவாங்களா, கரெக்ட்டா இப்போ திருவிழா வேற வருமா, சூப்பர்ரா இருக்கும், நல்லா என்ஜாய் பண்ணேன்”

“இம்... உனக்காவது அந்த கொடுப்பினை இருக்கே, எனக்கு எல்லாம் அது கொடுத்து வைக்கவில்லை” எனப் பெருமூச்சோடு வருத்தப்பட்டான்.

அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள், ஏனெனில் இப்போது தான் அவன் அவர்கள் குடும்பத்தை பற்றி மறைமுகமாக அவனேப் பேசுகிறான். இவளாக கேட்டால் கூட மேலோட்டமாக சொல்லி, பேச்சைத் திசைத்திருப்பி விடுவான். இப்போதும் அதே போல, “சரி... விடு, காலங்காத்தால நான் வைலின் வாசிக்கல, நீ போய் ரெடியாகு”

“என்ன சஞ்சீவ், என்ன(னை) காலேஜூக்குக் கிளப்பி விடுறதுக்கு தான் போன் பண்ணீங்களா?”

இது என்ன மாயம் _சாரா

“ஆமா, என்னமோ உன்ன நேருலப் பார்க்கணும் போல தோனுச்சு, அதான் நீ காலேஜ் போகும் போது பார்க்கலாம்னு, நினைச்சேன்”

“சரி முடிஞ்சாப் பார்க்கலாம், நீங்க வேலைக்கு போகலையா?”

“இம்... போனும், கிளம்பிட்டே இருக்கேன். ஓகே பை “ என வைத்து விட்டான்.

ஆனால் காலையில் அவனை அவள் பார்க்கவில்லை, ஆனால் இப்போது ஏன் இப்படி கேட்டிருக்கிறான்? என்று அவள் எண்ணினாள். “ஒரு வேளை, பெர்மிஷன் போட்டு பார்க்க வருகிறானோ? ஆனாலும் இப்போது வருவதற்கு காலையில் இருந்து ஏன் கேட்டிருக்கிறான்? ஏதோ இடிக்குதே...” என்று அவள் குழம்பும் வேளை, அவள் தோழி மலர் “ஹே வா அஜி, கான்டீன் போலாம், நான் லஞ்ச் கொண்டு வரல” என்றாள்.

“நான் டிபன் கொண்டு வந்துட்டேன் பா”

“நீ டிபன் எடுத்திட்டு வா, அப்படியே அங்க ஷேர் பண்ணி சாப்பிட்டுக்கலாம், சீக்கிரம் வா, இல்ல சீட் கிடைக்காது” என்று அவள் பிரஜீயை இழுத்துக் கொண்டு போனாள்.

பிரஜீதா கான்டீன் செல்லும் வழியில், சஞ்சீவை அங்கு பார்த்து, கண்களை விரித்து ஆச்சரியத்தோடுப் பார்த்தாள்.

மாயம் தொடரும்..........

இது என்ன மாயம் - சாரா